


**15.08.2022**

## 8. ‘அவரை அறிந்தவர்கள் பெற்றிடும்’ மாறாத கிருபை!

நம் தேவன் மகா அன்புள்ளவர்! கிருபை நிறைந்தவர்! இந்த உலகத்திலுள்ள மனுக்குலம் அவரது செட்டைகளின் நிழலிலில் தான் வாழ்கிறார்கள்! அவர்கள் தீயோராயிருந்தாலும், நல்லோரா யிருந்தாலும் ‘மனுப்புத்திரர்’ அனைவரையும் அன்புகூர்ந்து காப்பதை ‘அவரது அருமையான கிருபை’ என்றே வேதம் கூறி வியக்கின்றது! (சங்.36:7).

ஆகிலும், அவர் மானிடர் எல்லோர்மீதும் காண்பித்திடும் கிருபையை “கிருபை, கிருபை” என வெறுமையாய் கொண்டாடிச் சென்று விடாதீர்கள்! 10-ம் வசனம் குறிப்பிடும் “உம்மை அறிந்தவர்கள் மேல் உமது கிருபை” என்ற தனிப்பட்ட பாக்கியமே நித்தியானந்தம்! அது, அவரே நம் மேய்ப்பனாய் நின்று நடத்தும் “நம் ஜீவனுள்ள நாட்களெல்லாம்” தொடரும் நிலைத்திருக்கும் கிருபை! (சங்.23:6). சத்துருக்களோ, மரண இருளோ போன்ற யாவற்றிலிருந்தும் காத்திடும் போதுமான அந்த கிருபை, கர்த்தரை தன் சொந்த மேய்ப்பராய் பெற்றவர்களுக்கே அருளப்படுகிறது! இந்த பாக்கியமே, நமக்கு சொந்தமாய் மாறக்கடவது!

**– ரத்னம்**